[1981 பிப்ரவரி 5

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டுக்கான திட்டங்களை நாம் தீட்டி வருகின்றோம். அடுத்த ஆண்டுத் திட்டத்திலே அந்தப் பகுதி கள் அடங்கியிருக்கின்றனவா, இல்லையா என்பதைப் பற்றிய விவரக் குறிப்பு என்னிடத்திலே இல்லை. அடுத்த ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு மீனளத் துறை எந்த எந்த இடங்களை சிபாரிசு செய்கிறார்கள், எவை எவை ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என்ற விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

சேரன்மாதேவி துணைக் கருவூலம்.

*வினா எண் 184—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற க. சொர்ணம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேரன்மாதேவியில் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள கரு ஆலத்திற்கு எந்தெந்த கிராமங்களை அரசு ஒதுக்கியுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சேரன்மாதேவி வட்டத்தில் பாப்பாக்குடி, முக்கூடல், சேரன்மாதேவி மற்றும் மேலச்செவல் என்ற நான்கு உள்வட்டத்திலுள்ள கிராமங்கள் அடங்கும். சேரன்மாதேவி துணைக் கருவூலம் மேற்கூறிய நான்கு உள்வட்டத்திலுள்ள கிராமங்களில் வாழும் பொது மக்கள் மற்றும் அரசு அலுவலர்களின் தேவைகளைக் கவனித்து வருகிறது.

[முற்பகல் 9—20]

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சேரன்மாதேவி கருவூலத் திற்கு அனுமதிக்கப்பட்ட அந்த கிராமங்கள், பிர்காக்கள் ஏற் கனவே அம்பாசமுத்திரத்தில் இருந்தது. பக்கத்திலே இருந் ததால் அந்தப் பகுதி மக்களுக்கு நலமாக இருந்தது, அதைப் பிரித்து சேரன்மாதேவி கருவூலத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதற்கு நன்றி. ஆனால் அம்பாசமுத்திரத்துக்குப் பக்கத்தில் இருக்கிற சாட்டுப்பத்து, பனஞ்சாடி, பள்ளாக்கால், பொதுக் குடி போன்ற கிராமங்கள் அம்பாசமுத்திரத்திற்கு அப்பால் 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சேரன்மாதேவி கருவூலத் துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று அம்பாசமுத் திரத்தில் இருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கல் லிடைக்குறிச்சி மற்றும் சில கிராமங்கள் 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சேரன்மாதேவி கருவூலத்துடன் சேர்க்கப் பட்டிருக்கிறது. அவர்கள் 20 கி. மீட்டர் தூரம் கடந்து செல்லும் நிலை இருக்கிறது. இந்த நிலை தவறாக ஏற்பட்டி ருக்கிறதல்லவா ? அப்படியானால் அந்தத் தவறை நிவர்த்தி

1981 பிப்ரவரி 5]

செய்து அம்பாசமுத்திரத்தில் உள்ள கருவூலத்துடன் அதை இணைக்க ஏற்பாடு செய்வதோடு, அந்தத் தவறை திருத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம் துணைக் கருவூலத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டிய நிலை வந்தது. காரணம் அம்பாசமுத்திரத்தில் வேலை மிகுதியாக இருப்பதன் காரணமாக அதை இரண்டாகப் பிரித்து சேரன்மாதேவி, அம்பாசமுத்திரம் கருவூலங்கள் என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டது. ஏற்கனவே அம்பாசமுத்திரம் கருவூலத்தில் எந்தெந்தப் பகுதிகள் கவனிக்கப்பட்டு வந்தனவோ அதை இரண்டாகப் பிரித்து ஒரு பகுதி அம்பாசமுத்திரம் கருவூலத்திலும், மறு பகுதி சேரன்மாதேவி கருவூலத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருவூலத்தைப் பிரிப்பதிலே ஏற்பட்டுள்ள சங்கடங்களை இடர்பாடுகளை மனு மூலம் எடுத்துச் சொல்வார்களேயானால், மறுபடியும் வேண்டுமானால் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கலாம். மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் உள்ளவர்களைக் கலந்து அவர்களுடைய யோசனையைக் கேட்டு, கருவூலத் துறை இயக்குனர் இதை ஆராயலாம். ஆகவே எந்தெந்தப் பகுதி அம்பாசமுத்திரத்திலும், எந்தெந்தப் பகுதி சேரன்மாதேவியிலும் இருக்கலாம் என்ற விவரக் குறிப்புகளை மாண்புமிகு உறுப்பினர் தருவார்களானால் அதுபற்றி ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

சிலைகள் திருடு போவதைத் தடுத்தல்.

* வினா எண் 185—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிலைகள் திருடு போவதைத் தடுக்க அரசு என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

விவர அறிக்கை * அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, இந்தச் சிலைகளைத் திருடி வெளிநாட்டுக்கு கடத்துகின்றவர்கள், நாட்டையும் காட்டிக் கொடுக்கத் தயங்கமாட்டார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு மரண தண்டனை போன்ற தண்டனைகளை

* 240-242-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.